# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 099 ★10.08.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:099 ★10.08.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai


# சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 15 நீதிபதிகளுக்கும் தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம்

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 5 நிரந்தர நீதிபதிகள் மற்றும் 10 கூடுதல் நீதிபதிகளுக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி நேற்று உயர் நீதிமன்ற கலையரங்கில் நடைபெற்ற விழாவில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பாரம்பரியமிக்க சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. இதில் 8 வழக்கறிஞர்கள், 7 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 15 பேரை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கடந்த 7ம் தேதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து புதிய நீதிபதிகள் பதவியேற்பு விழா, உயர் நீதிமன்ற கலையரங்கில் நேற்று நடந்தது.

புதிய நீதிபதிகள் 15 பேருக்கும் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி தனித்தனியாக பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில், சென்னை உயர் நீதிமன்ற இந்நாள் மற்றும் முன்னாள் நீதிபதிகள், அரசு வழக்கறிஞர்கள், புதிய நீதிபதிகளின் குடும்பத்தினர், வழக்கறிஞர்கள், நீதித்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் திரளாக பங்கேற்றனர்.

புதிய நீதிபதிகள் குறித்த விவரம்:

நீதிபதி கே.கோவிந்தராஜன்: உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகித்த இவர். 1972 மார்ச் 8 ம் தேதி குளித்தலையில் பிறந்தவர். 1994ல் வழக்கறிஞராக பதிவு செய்த இவர், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கறிஞராக நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர்.

நீதிபதி ரஜ்னிஷ் பதியால்: அமலாக்கத்துறை சிறப்பு அரசு வழக்கறிஞராக பதவி வகித்த இவர், 1973 பிப்.28 அன்று பிறந்தவர். 1996ம் ஆண்டு சென்னை அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் முதுநிலை சட்டம் படித்துள்ளார்.

நீதிபதி என்.ரமேஷ்: அமலாக்கத்துறை சிறப்பு அரசு வழக்கறிஞராக பணியாற்றிய இவர், 1973ம் ஆண்டு பிறந்தவர். முதல் தலைமுறை வழக்கறிஞர். 1997ம் ஆண்டு வழக்கறிஞராக பார் கவுன்சிலில் பதிவு செய்தார். வணிகச் சட்டத்தில் முதுகலை சட்டம் படித்துள்ளார். 2003 டிசம்பரில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில நீதித்துறை தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கும் மேலாக சிவில்நீதிபதியாக பணியாற்றிய அனுபவமிக்கவர். தனது பணியை ராஜினாமா செய்துவிட்டு 2009 முதல் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

நீதிபதி ஜி.கே.முத்துக்குமார்: ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தைச் சேர்ந்த இவர், 202021 காலகட்டங்களில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கறிஞராக பணியாற்றியவர். 1974ம் ஆண்டு அக்டோபரில் பிறந்தார்.


பெங்களூரு பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை முடித்து வழக்கறிஞராக பதிவு செயதார். திருப்பதி லட்டு, ஈரோடு மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுக்கொடுத்துள்ளார்.

கே.கோவிந்தராஜன், ரஜ்னிஷ் பதியால், ஜி.கே.முத்துக்குமார், ஆர்.ராஜேஷ் விவேகானந்தன்

நீதிபதி ஆர்.ராஜேஷ் விவேகானந்தன்: மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகித்த இவர், 1975ம் ஆண்டு ஜன.3ல் பிறந்தவர்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தாண்டவன்காடு பகுதியைச் சேர்ந்தவர். மதுரை சட்டக்கல்லூரியில் படிப்பை முடித்து 1998ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தார். தொல்லியல்துறை, ஹோமியோபதி தேசிய ஆணையம் உள்ளிட்ட மத்திய அரசு துறைகளில் வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.

நீதிபதி எஸ்.ரவீக்குமார்: புதுச்சேரி அரசின் மாநில அரசு வழக்கறிஞராக பணியாற்றிய



இவர், 1977 டிச.23ல் சென்னையில் பிறந்தவர். கோவை சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து 2000ல் வழக்கறிஞராக பதிவு செய்துள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் புதுச்சேரி அரசு சார்பில் ஏராளமான வழக்குகளில் ஆஜராகியுள்ளார்.

நீதிபதி என்.திலீப்குமார்: வருமான வரித்துறை, சுங்கத்துறை, அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் என மத்திய அரசு வழக்கறிஞராக பணியாற்றிய இவர், 1980 மார்ச் 22ல் பிறந்தவர். சிவகாசியை சேர்ந்த இவரது தந்தை நாகராஜன் தொழிலதிபராக உள்ளார். தாயார் அமுதா. சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்து 2002ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்து மத்திய அரசுக்காக பல்வேறு வழக்குகளில் ஆஜராகியுள்ளார்.

நீதிபதி இ.மனோகரன்: சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு அரசு வழக்கறிஞராகவும், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் அலுவலகத்திலும் பணியாற்றிய இவர், 1978 அக்.27ல் பிறந்தவர். சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும், சிங்கப்பூரில் முதுகலை படிப்பையும் முடித்து 2003ம் ஆண்டு முதல் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார்.

எஸ். ரவீக்குமார், என்.திலீப்குமார், இ.மனோகரன், டாக்டர் பி.முருகன்

நீதிபதி டாக்டர் பி.முருகன்: மாவட்ட முதன்மை நீதிபதியாக பணியாற்றி வரும் இவர், 1974 மே 20ம் தேதி பிறந்தவர். திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர். சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து 1997ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தார். சென்னையில் முதுகலை படிப்பை முடித்து சமூகவியல், தத்துவயியல் மனித உரிமைகள் என 10க்கும் மேற்பட்ட முதுகலை பட்டங்களையும், அரசியலமைப்பு சட்டத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

நீதிபதி எம்.டி.சுமதி: திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இவர் திருச்சி சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து வழக்கறிஞராகி பின்னர் நீதிபதியாக தேர்வானார். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம், தேனி மகளிர் நீதிமன்றம், ராமநாதபுரம், அரியலூர், புதுச்சேரி என பல்வேறு இடங்களில் நீதிபதியாக பணியாற்றியுள்ளார்.

நீதிபதி எஸ்.அல்லி: சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமைப் பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், 1966 ஜூன் 11ல் சீர்காழி தாலுகா வடரங்கத்தில் பிறந்தவர். திருச்சி சட்டக்கல்லூரியில் படிப்பை முடித்து, வழக்கறிஞராக பார் கவுன்சிலில் பதிவு செய்தார். சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

நீதிபதி சி. திருமகள்: வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவர் பள்ளிப்படிப்பை வேலூரிலும், சட்டப்படிப்பை சென்னையிலும் முடித்து வழக்கறிஞராக பதிவு செய்தார். மதுரை, அம்பத்தூர், சென்னை போதைப் பொருள் கடத்தல் தடுப்பு சிறப்பு நீதிபதியாகவும், சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்ற நீதிபதியாகவும் கடலூர் மகளிர் நீதிமன்ற நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

எம்.டி. சுமதி, எஸ். அல்லி, சி. திருமகள், எஸ். கார்த்திகேயன்

நீதிபதி எஸ்.கார்த்திகேயன்: கடந்த 2024ம் ஆண்டு முதல் சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாக பணியாற்றி வரும் இவர், சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் பிறந்தவர். சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப்படிப்பை முடித்தவர். 2021 ஏப்ரல் முதல் 2022 டிசம்பர் வரை புதுச்சேரி அரசின் சட்டத்துறை செயலராக பணியாற்றியுள்ளார்.

நீதிபதி பி.முருகேசன்: சென்னை சிபிஐ சிறப்புநீதிமன்றத்தில் முதன்மைநீதிபதியாக பணியாற்றி வரும் இவர், 1970ம் ஆண்டு ஏப்.3ல் பிறந்தவர். திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டியைச் சேர்ந்தவர். மதுரை சட்டக்கல்லூரியில் படிப்பை முடித்த இவர் வழக்கறிஞராக திண்டுக்கல்லில் பணியாற்றி வந்தார்.

நீதிபதி என்.குணசேகரன்: திருப்பூர், திருச்சி, நாமக்கல் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாக பணியாற்றிய இவர், 1976 பிப்.1ல் கோவையில் பிறந்தவர். கோவை சட்டக்கல்லூரியில் சட்டம் படித்து 2002ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தார். பல்வேறு மாவட்டங்களில் நீதிபதியாக பணியாற்றியுள்ளார்.


தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு


R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



# அண்ணாமலையார் கோயில் கருவறையை ரகசிய கேமராவில் படம் பிடித்ததாக 2 பேர் சிக்கினர்: தெலங்கானா சாப்ட்வேர் இன்ஜினியரிடம் போலீஸ் விசாரணை

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் கோயில் கருவறையை ரகசிய கேமரா மூலம் படம் பிடித்ததாக தெலங்கானா மாநிலத்தைச் சேர்ந்த 2 பேரை கோயில் ஊழியர்கள் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த மவுனிஷ் (27) என்பவர் தனது நண்பர் மகேஷ் என்பவருடன் சாமி தரிசனம் செய்வதற்காக வந்ததாக கூறப்படுகிறது. மவுனிஷ் சாப்ட்வேர்இன்ஜினியராகபணியாற்றி வருவதாகவும், மகேஷ் குறித்த முழு விவரங்கள் போலீஸ் விசாரணையில் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இருவரும் கோயிலில் தரிசனம் செய்து கொண்டிருந்தபோது, அண்ணாமலையார் சன்னதி கருவறை பகுதி





யில் ரகசிய கேமரா மூலம் புகைப்படம் எடுத்ததாக கூறப்படுகிறது. தொடர்ந்து உண்ணாமுலையம்மன் சன்னதி பகுதியில் புகைப்படம் எடுக்க முயன்றபோது கேமராவின் ஃப்ளாஷ் வெளிச்சம் மின்னியதாக தெரிகிறது.

இதனை கவனித்த கோயில் ஊழியர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக இருவரையும் பிடித்து விசாரித்தபோது, அவர்களிடம் ரகசிய கேமரா பொருத்தப்பட்ட கண்ணாடி உள்ளிட்ட சாதனங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து கோயில் நிர்வாகத்தினர் இருவரையும் திருவண்ணாமலை நகர போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

போலீசார் விசாரணை

போலீசார் இருவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களிடம் இருந்த மின்னணு சாதனங்கள் மற்றும் கேமராவில் பதிவாகியுள்ள புகைப்படங்கள், வீடியோக்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாக தெரிகிறது.

மேலும், கருவறை பகுதியில் புகைப்படம் எடுக்க அவர்களுக்கு வேறு யாரேனும் உதவி செய்தார்களா, கோயிலின் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி ரகசியமாக படம் எடுப்பதற்கான காரணம் என்ன, ஏற்கனவே இதுபோன்று வேறு பகுதிகளில் புகைப்படம் அல்லது வீடியோ பதிவு செய்துள்ளனரா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

அண்ணாமலையார் கோயில் நாட்டின் முக்கிய ஆன்மிகத் தலங்களில் ஒன்றாக இருப்பதால், கோயிலின் கருவறை மற்றும் முக்கிய சன்னதிகளில் புகைப்படம், வீடியோ எடுப்பதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. குறிப்பாக கருவறை உள்ளிட்ட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் மின்னணு சாதனங்களை பயன்படுத்துவது தொடர்பாக கோயில் நிர்வாகத்தால் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ரகசிய கேமரா மூலம் கருவறையை படம் பிடித்ததாக 2 பேர் சிக்கியிருப்பது கோயில் நிர்வாகம் மற்றும் பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமித்ஷா வருகையையொட்டி பரபரப்பு

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இன்று திருவண்ணாமலைக்கு வருகை தர உள்ள நிலையில், அண்ணாமலையார் கோயில் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சூழலில் கருவறையை ரகசிய கேமராவில் படம் பிடித்ததாக 2 பேர் பிடிபட்ட சம்பவம் கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சரின் வருகையை முன்னிட்டு கோயில், ஹெலிபேடு மற்றும் அவர் பயணிக்கும் வழித்தடங்களில் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டம் மற்றும் மின்னணு சாதனங்களின் பயன்பாடு குறித்தும் பாதுகாப்புப் படையினர் கண்காணித்து வருகின்றனர். பிடிபட்ட இருவரிடமும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வரும் நிலையில், அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சாதனங்களில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்த பின்னரே இந்த சம்பவத்தின் முழுமையான பின்னணி தெரியவரும் என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திண்டுக்கல் குமுளி இருவழிச்சாலையில் தொடரும் மரண அவலங்கள்: நான்கு வழிச்சாலை மாற்றம் எப்போது? வாகன விபத்துகள் தடுக்கப்படுமா?

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களை இணைக்கும் மிக முக்கியமான வணிக மற்றும் சுற்றுலா பாதையாக திகழ்கிறது திண்டுக்கல் தேனி குமுளி தேசிய நெடுஞ்சாலை ( NH183). நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான சரக்கு லாரிகள், சுற்றுலா பேருந்துகள், சபரிமலை பக்தர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் வாகனங்கள் பயணிக்கும் இச்சாலை, தற்போது நித்தமும் விபத்துகள் அரங்கேறும் ஆபத்தான மண்டலமாக மாறியுள்ளது. சுமார் 133 கிலோமீட்டர் தொலைவு கொண்ட இந்த இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்த வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசால் ரூ.3,000 கோடிக்கும் அதிக மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்த கொள்கை அளவிலான அனுமதியும் வழங்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், தரைதளத்தில் பணிகள் தொடங்குவதில் நிலவும் தாமதம் காரணமாக நாளுக்கு நாள் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போதைய இருவழிச்சாலையில் விபத்துகளை தடுப்பதற்காக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) ஆபத்தான வளைவுகள், கரடுகள் மற்றும் கிராம புறவழி சந்திப்புகளில் சிவப்பு நிற பிளாஸ்டிக் தடுப்புத் தூண்கள் (BOLLARDS) நடுவில் வரிசையாக பொருத்தப்பட்டுள்ளன. ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தை வளைவுகளில் முந்திச் செல்வதை (OVERTAKING) தடுப்பதே இதன் முதன்மை நோக்கமாகும். ஆனால், இந்த பாதுகாப்பு ஏற்பாடே தற்போது பல விபத்துகளுக்கு காரணியாக மாறியுள்ளது. இரவு நேரங்களில் அதிவேகமாக வரும் கனரக வாகனங்கள் மோதி இந்த பிளாஸ்டிக் தூண்கள் உடைந்து, நடுரோட்டில் சரிந்து கிடக்கின்றன. ஒளிரும் பட்டைகள் சேதமடைந்து கிடப்பதால், பின்னால் வரும் வாகன ஓட்டிகளுக்கு தூண்கள் உடைந்திருப்பது தெரிவதில்லை. தூண்கள் இல்லாத இடைவெளியை பார்த்துக்கொண்டு அவசரமாக முந்திச் செல்ல முயலும் போது, எதிரே வரும் வாகனங்கள் மீது மோதி கோர விபத்துகள் நிகழ்கின்றன.

மேலும், வளைவுகளில் ஒரு மெதுவாக செல்லும் டிராக்டர் அல்லது லாரிக்கு பின்னால் அதிவேக வாகனங்கள் அணிவகுக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதில் பொறுமையிழக்கும் ஓட்டிகள் உடைந்த பிளாஸ்டிக் தூண் இடைவெளியில் முந்த முற்படும்போது நிலைதடுமாறி விபத்தில் சிக்கி கொள்கின்றனர்.

இதனுடன் சேர்த்து, ஊர் சந்திப்புகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேரிகார்டுகளில் போதுமான எச்சரிக்கை விளக்குகளோ, தூரத்தில் இருந்து காட்டும் அறிவிப்பு பலகைகளோ இல்லாததால், குறிப்பாக தேனி மாவட்ட எல்லைக்குட்பட்ட வளைவுகள் மற்றும் சந்திப்புகளில் இருசக்கர வாகன ஓட்டிகள் அதிக அளவில் பலியாகி வருகின்றனர்.

நான்கு வழிச்சாலை திட்டம் முழுமை பெற வேண்டுமானால் கூடுதல் நிலங்களை கையகப்படுத்துவதும், பழைய ஆக்கிரமிப்புகளை அகற்றுவதும் மிக அவசியமாகிறது. இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கையில், நில எடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளுக்கு உள்ளாட்சி துறை மற்றும் வருவாய் துறையின் 'சர்வேயர்கள்' (LOCAL SURVEYORS) போதிய அளவில் விரைந்து ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றன. வருவாய் துறை சர்வேயர்கள் களத்தில் இறங்கி எல்லைகளை துல்லியமாக குறித்து கொடுத்தால் மட்டுமே ஆக்கிரமிப்புகளை அகற்றவும், நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கி நிலத்தை கையகப்படுத்தவும் முடியும். இதில் ஏற்படும் தாமதமே நான்கு வழிச்சாலைத் திட்டம் விரைவாக செயல்பட தடையாக உள்ளது.

திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய இரு மாவட்டங்களின் வழியே செல்லக்கூடிய இச்சாலை, குறிப்பாகத் தேனி மாவட்டத்தில் தான் மிக நீண்ட தூரத்தையும், அதிக விபத்துப் பகுதிகளையும் கொண்டுள்ளது. எனவே, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்களும், தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளும் உடனடியாக இதில் தலையிட வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்பாகும்.

சேதமடைந்து கிடக்கும் சிகப்பு பிளாஸ்டிக் தூண்களை உடனடியாக அகற்றிவிட்டு, தற்காலிகமாக பலமான, ஒளிரும் பட்டைகளுடன்கூடிய மையத்தடுப்புகளைஅமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, உள்ளூர் வருவாய் துறை சர்வேயர்களை கொண்டு நில அளவை பணிகளை விரைவுபடுத்தி, ரூ.3,000 கோடி மதிப்பிலான நான்கு வழிச்சாலை திட்டத்தின் கட்டுமான பணிகளை தாமதமின்றி உடனடியாக தொடங்க வேண்டும். மனித உயிர்களை பலிவாங்கும் இந்த சாலையை விரைந்து விரிவுபடுத்துவதே இதற்கு நிரந்தர தீர்வாக அமையும்.

# கோட்டூர் ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம்

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி அத்தி வாக்கம் கோட்டூர் கிராமத்தில் அமைந் துள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழாவை



முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி தீர்த்தக்கிரியம் பட்டு ஊராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர் செல்வராஜ் மற்றும் குடும்பத்தினர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 1000க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதான நிகழ்ச்சினை துவக்கிவைத்தனர்.

# தங்கவயல் ஓரியண்டல் லைன், கோரமண்டல் போஸ்ட் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில், 80ஆம் ஆண்டு ஆடித் திருவிழா

தங்கவயல் ஓரியண்டல் லைன், கோரமண்டல் போஸ்ட் பகுதியில் அமைந் துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம் மன் திருக்கோயிலில், 80ஆம் ஆண்டு ஆடித் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

ஆடி மாதம் என்றாலே அம்மன் வழி பாட்டிற்கு மிகவும் சிறப்பு வாய்ந்த மாத மாக பக்தர்களால் போற்றப்படுகிறது. இந்த புனிதமான ஆடி மாதத்தில், தங்க



ளது வேண்டுதல்கள் நிறைவேற வேண் டும் என்றும், குடும்பத்தில் நலமும் வள மும் பெருக வேண்டும் என்றும் பக்தர்கள் அம்மனை வழிபட்டு வரு கின்றனர்.

அந்த வகையில், தங்கவயல் ஓரியண் டல் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து மாரி அம்மன் திருக்கோயிலில், இந்த ஆண்டு 80ஆம் ஆண்டு ஆடித் திரு விழாநடைபெறுவது பக்தர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள் ளது. வரும் ஆகஸ்ட் 13, 14, 15 மற்றும் 16ஆம் தேதிகளில் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற உள்ள இந்த திருவி ழாவில், அம்மனுக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் மற்றும் பல்வேறு ஆன் மிக நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. திருவிழாவை முன்னிட்டு கோவில் வளாகம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பக்தர்களை வரவேற்கும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன. நான்கு நாட்களும் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து, ஸ்ரீ முத்துமாரி அம்ம னின் திருவருளைப் பெற உள்ளனர். ஆடி மாதத்தில் அம்மனை வழிபடுவ தன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம் மற்றும் வளம் பெருகும் என்ற பக்தர்களின் நம்பிக்கை யுடன், இந்த ஆண்டும் ஏராளமான பக் தர்கள் திருவிழாவில் பங்கேற்க உள்ளனர். குறிப்பாக, தங்கவயல் மட்டுமின்றி ஓரி யண்டல், கோரமண்டல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த பக்தர்க ளும் திருவிழாவில் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்ய உள்ளனர். "அம்மன் அருளால் அனைத்து குடும் பங்களிலும் நலமும் வளமும் பெருகட் டும்; அனைவரது வேண்டுதல்களும் நிறைவேறட்டும்" என்ற பக்தி உணர்வு டன், பக்தர்கள் திருவிழாவை எதிர் நோக்கி காத்திருக்கின்றனர். இந்த 80ஆம் ஆண்டு ஆடித் திருவிழா வில்தங்கவயல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து பக்தர்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டு, ஸ்ரீ முத்துமாரி அம்மனை தரிசித்து, அம் மனின் திருவருளைப் பெற்றுச் செல்லுமாறு விழா பஞ்சாயத்து சார் பில் அன்பான அழைப்பு விடுக்கப்ப ட்டுள்ளது. இந்த அழைப்பை விழா பஞ்சாயத்து நிர்வாகிகளான திரு. வி.சி. கணேசன், திரு. சண்முகம், திரு. ஜெய சீலன், திரு. நீதிபதி, திரு. கீர்த்திசீலன், திரு. சம்பத், திரு. வி.சி. நடராஜன், திரு. ஜெகநாதன், திரு. பழனி, திரு. சந்திரகு மார் உள்ளிட்டோர் விடுத்துள்ளனர்.

80 ஆண்டுகளாக தொடர்ந்து நடை பெற்று வரும் இந்த ஆடித் திருவிழா, பக்தர்களின் நம்பிக்கையையும், ஆன் மிக ஒற்றுமையையும் வெளிப்படுத் தும்முக்கியமானவிழாவாகதிகழ்கிறது. அம்மனை வேண்டி வரும் ஒவ்வொரு பக்தருக்கும் மனநிம்மதியும், குடும்பத் தில் மகிழ்ச்சியும், வாழ்வில் வளமும் கிடைக்க வேண்டும் என்பதே அனைவ ரின் பிரார்த்தனையாக உள்ளது. "அம்மன் துணை இருந்தால் அச்சம் இல்லை...அம்மன் அருள் இருந்தால் குறை இல்லை...அம்மனை சரணடைந் தால் வாழ்வில் நன்மையே!"

என்ற பக்தி முழக்கத்துடன், 80ஆம் ஆண்டு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆடித் திருவிழா சிறப்பாக நடைபெற பக்தர் கள் அனைவரும் வாழ்த்துக்களைத் தெரி வித்து வருகின்றனர்.

ஸ்ரீ முத்துமாரி அம்மனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்... அனைத்து குடும்பங்களிலும் அமைதி, ஆரோக்கியம், மகிழ்ச்சி, வளம் பெரு கட்டும்...அம்மன்அருளால்இந்த ஆடித் திருவிழா சிறப்பாகவும், பக்தி பரவசத் துடனும் நடைபெறட்டும்! ஓம் சக்தி... பராசக்தி...ஸ்ரீ முத்துமாரி அம் மனுக்கு அரோகரா!

## நிலத் தகராறில் தாக்குதல்:

# மனவேதனையில் தந்தை உயிரிழப்பு; 12 பேர் மீது நடவடிக்கை கோரி மகன் புகார்

கலசப்பாக்கம் அருகே நிலத்தை அளவீடு செய்யச் சென்றபோது ஏற் பட்ட தகராறில் குடும்பத்தினர் தாக் கப்பட்டதாகவும், இதனால் மனவேதனை அடைந்த தந்தை பூச்சி மருந்து குடித்து உயிரிழந் ததாகவும் கூறி, 12 பேர் மீது நடவடிக்கை எடுக்கக்



கோரி மகன் மாவட்ட காவல் கண்கா ணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளார்.

அலங்காரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ராஜ் (31) அளித்துள்ள புகா ரில், தங்களுக்கும் உறவினர்களுக்கும் இடையே நிலம் தொடர்பாக ஏற்க னவே நீதிமன்றத்தில் வழக்கு நிலு வையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். கடந்த 5ந் தேதி தங்களது நிலத்தை அளவீடு செய்ய சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் வந் தபோது, எதிர்தரப்பைச் சேர்ந்த 12 பேர் தடி உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்து தகராறில் ஈடுபட்டதாக கூறியுள்ளார். அப்போது தனது தந்தை அர்ச்சுணன், தாய் மற்றும் தன்னை எதிர் தரப்பினர் தாக்கியதுடன், குடும்பத்தையே கொலை செய்து விடுவோம் என மிரட்டியதாகவும் புகாரில் தெரிவித்துள்ளார். இதனால் மனவேதனை அடைந்த தந்தை அர்ச்சுணன், அன்று இரவு பூச்சி மருந்து குடித்ததாகவும், உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 7ந் தேதி மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளார். தந்தையின் உயிரிழப்புக்கு காரணமா னவர்கள்மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராஜ் தனது புகா ரில் கோரியுள்ளார்.





# திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தில் அமித்ஷா வழிபாடு

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் சாமி தரிசனம் செய்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நேற்று முன்தினம் மாலை 6.30 மணியள வில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு சென்றார்.

அவருக்கு ரமணாஸ்ரம நிர்வாகம் சார்பில் சிறப்பு வர வேற்பு அளிக்கப்பட்டது. புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் மற்றும் கார்த்தியாயினி ஆகியோர் அமித்ஷாவுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து, ஸ்ரீ ரமண மகரிஷியின் நினைவி டத்தில் அமித்ஷா சுமார் 20 நிமிடங்கள் வழிபாடு செய் தார். பின்னர் ரமணாஸ்ரமத்தில் இருந்து இரவு 7 மணி யளவில்கார்மூலம்புதுச்சேரிக்குபுறப்பட்டுச்சென்றார்.

முன்னதாக தனது சமூக வலைதளப் பதிவில் அமித்ஷா, ஸ்ரீ ரமண மகரிஷியின் வாழ்க்கையும் போத னைகளும் மனிதகுலத்திற்கு என்றென்றும் வழிகாட் டும் ஞான ஊற்றாக திகழ்வதாக குறிப்பிட்டிருந்தார். மேலும், ரமண மகரிஷியின் ஆசிகள் அனைவருக்கும் நல்வாழ்வையும், அமைதியையும், செழிப்பையும் வழங்க வேண்டும் என பிரார்த்தனை செய்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.





# நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் பாலம் சுவற்றில் தவெக கொடி வண்ணம்?

## அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவ ரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட ஆட்டந்தாங் கல் பகுதியில் சோழவரம் சரக காவல் உதவி மையம் அருகில் கிருஷ்ணாநீர் செல்லும் சிறுபாலம் அமைந் துள்ளது. அரசுக்கு சொந்தமான இந்த பாலத்தின் இரு புறங்களிலும் ஆளுங்கட்சியான தவெக கொடி வண் ணம் தீட்டப்பட்டுள்ளது. இதனை பார்த்த அப்பகுதி பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்த தோடு இதுவரை திமுக, அதிமுக உள்ளிட்ட எந்த கட் சியினரும் இதுபோன்று அரசு பொதுச் சொத்தில் எந்தக் கட்சி கொடியின் வண்ணத்தை தீட்டியது இல்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே தவெக கட்சி யின் கொடி வண்ணத்தை உடனடியாக மாற்ற வேண்டு மென்று பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். சம்பந்தப்பட்ட அரசு அதி காரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

# பழனி காவல் துணைக் கண்காணிப்பாளராக தேவராஜ் பொறுப்பேற்பு




திண்டுக்கல் மாவட்டம், பழனி காவல் உட்கோட்டத் தின் புதிய துணைக் காவல் கண்காணிப்பாளராக தேவ ராஜ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். பழனி உட்கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்டம்– ஒழுங்கை பாதுகாத்தல், குற்றச்செயல்களைத் தடுப்பது மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வ தில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள் ளார்.. புதிய துணைக் கண்காணிப்பாளருக்கு வாழ்த்து கள்!

## தூயபேட்டரிக்சர்ச்சில் இந்திய மிஷனரி சங்கம் சார்பில்

# போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தூத்துக்குடி நாசரேத் திருமண்டல லே செயலாளர் எஸ் டி கே ராஜன் தங்ககாசுகள், பரிசு வழங்கினார்



தூத்துக்குடி 1.ஆம் கேட்டு அருகில் உள்ள தூயபேட்டரிக்சர்ச்சில் இந் திய மிஷனரி சங்கம் சார்பில் நடந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குதூத்துக்குடி நாசரேத் திருமண்டல லே செயலாளர் எஸ் டி கே ராஜன் தங்ககாசுகள், பரிசு வழங்கி னார்,

தூத்துக்குடி 1.ஆம் கேட் அருகில் அமைந்துள்ள தூய பேட்டரிக் சர்ச்சில் இந்திய மிஷனரி சங் கம் சார்பில் நடந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா தூத்துக்குடி நாசரேத் திருமண்டல லே செயலாளர் எஸ் டி கே ராஜன் தலைமை யில், C.S.I பேராலய சேகர தலைவர் VT.பிரின்ஸ் குமார்,பேராலய உதவி குருவானவர் பால் சாமுவேல் பொன் சிங், தொழிலதிபர்கள் தேவரா ஜன்,ராஜா, முன்னாள் நகர மன்ற தலை வர் இரா, ஹென்றி உட்பட ஏராளமான C.S.I கிறிஸ்தவர்கள் இன்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்


# சின்னமனூரில் அதிகாரிகளின் அலட்சியத்தால் 'மேம்பாலமாக' மாறிய சாக்கடை

## பொதுமக்கள் கடும் அவதி; நடவடிக்கை எடுக்க ஆட்சியருக்கு கோரிக்கை



தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சிக்கு உட் பட்ட ராதாகிருஷ்ணா ரைஸ் மில் தெருவில் நீண்ட நாட்க ளாக கழிவுநீர் செல்ல வழி யின்றி சாலையில் தேங்கி வந் தது. இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் நகராட்சி நிர்வா கத்திற்குத் தொடர்ந்து அழுத் தம் கொடுத்து வந்ததன் பல னாக, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சாக்கடை அமைக்கும் பணி தொடங்கியது. ஆனால், ஆரம்பம் முதலே இப்பணி மிகுந்த அலட்சியத் துடன் நடைபெற்று வந்துள் ளது. தொடக்கத்தில் சாக்கடையின் இரு புறமும் வெறும் 1 அடி அகலத்திற்கு மட்டுமே சுவர் எழுப்பப்பட்டது. இதனை கவனித்த சமூக ஆர்வலர்கள், நகராட்சி ஆணையர் (பொறுப்பு) உமா சங்கரிடம் புகார் தெரிவித்ததையடுத்து பணிகள் இடைநிறுத்தப்பட்டன. பின் னர் 4 நாட்கள் கழித்து மீண்டும் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், சாக்கடை யின் மேல்மூடி அமைப்பதாக கூறி, ஒப் பந்தப் பணியாளர்கள் இரவோடு இர வாக அதிக அளவில் சிமெண்ட் கலவையை போட்டு சாக்கடையை ஒரு 'மேம்பாலம்' போல தூக்கி கட்டி முடித் துள்ளனர். சின்னமனூர் நகராட்சி பொறி யாளர் மற்றும் 'ஓவர்சியர்' (OVERSEER) போன்ற பொறுப்புள்ள அதிகாரிகள் நேரடியாக வந்து கள ஆய்வு செய்யா ததே இந்த அவலத்திற்கு முதன்மை கார ணமாகும். அதிகாரிகளின் கண்கா ணிப்பு இல்லாததால், ஒப்பந்த பணியாளர்கள் தங்கள் இஷ்டத்திற்கு சாக்கடையை அதிக உயரத்தில் கட்டி முடித்துள்ளனர். மேலும், இந்தச் சாக்க டைக்கு மேல் வெறும் 5 அடி உயரத்தி லேயே வீடுகளுக்கு செல்லும் மின்சார கம்பிகளும் ஆபத்தான நிலையில் செல் கின்றன. சாக்கடை தரைமட்டத்திலிருந்து அள வுக்கு அதிகமாக உயர்த்தப்பட்டு மேம் பாலம் போல் உள்ளதால், அப்பகுதி யில் அன்றாடம் பள்ளிச் சிறுவர்களை ஏற்றி இறக்க வரும் பள்ளிப் பேருந்துக ளும், இருசக்கர வாகனங்களும் கூட செல்ல முடியாதவாறு பாதை முற்றி லும் முடங்கியு ள்ளது. இதனால் அப்ப குதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கும் வேத னைக்கும் உள்ளாகியுள்ளனர். எனவே, இந்த விவகாரத்தில் தேனி மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு, முறையான ஆய்வு மேற்கொள்ளாமல் அலட்சியமாக செயல்பட்ட நகராட்சி அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இனிவரும் காலங் களில் நகராட்சியில் எந்தவொரு வளர்ச் சிப் பணிகள் நடைபெற்றாலும், சம்பந் தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கட்டாயம் நேரில் சென்று ஆய்வு செய்த பிறகே பணிகளை தொடரவும், முடிக்க வும் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண் டும் என அப்பகுதி பொதுமக்கள் தீவிர கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செய்யாறில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முப்பெரும் விழா: ஆணையாளர் ஆண்ரூஸ் மரக்கன்றுகள் நட்டார்



செய்யாறில் மரக்கன்றுகள் நடுதல், கவிதைப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குதல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி என முப்பெரும் விழா நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்ட முத்தமிழ்ச் சங் கம், நிழல் பவுண்டேஷன் மற்றும் செய் யாறு கல்வி மாவட்ட பாரத சாரணர், சாரணியர் இயக்கம் ஆகியவை இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சி, செய் யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு முத்தமிழ்ச் சங்க நிறுவ னத் தலைவர் எறும்பூர் கை.செல்வகு மார் தலைமை வகித்தார். செய்யாறு கல்வி மாவட்ட சாரணர், சாரணியர் இயக்க மாவட்டச் செயலாளர் ஜே.பாபு வரவேற்றார்.

செயற்குழு உறுப்பினர் ஆர்.தமிழ்த் தேனி நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து விளக்கினார். பள்ளித் தலைமை ஆசிரி யர் க.ஜெயகாந்தன், தொழிலதிபர் பா.ஜெயக்குமார் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

மரக்கன்றுகள் நடவு

விழாவின் சிறப்பு விருந்தினராக பங் கேற்ற செய்யாறு நகராட்சி ஆணையா ளர் சே.ஆண்ரூஸ், பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு விழாவை சிறப் பித்தார். பள்ளி வளாகத்தில் 5 மரக்கன் றுகள் நடப்பட்டதுடன், மாணவர்க ளின் சுற்றுச்சூழல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் 25 மரக்கன்று கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற் றும் மரங்களின் முக்கியத்துவம் குறித்து கல்லூரி மாணவர் விஜய் விழிப்புணர்வு உரையாற்றினார். இயற்கைவளங்களை பாதுகாப்பதில் மாணவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என வலியுறுத் தப்பட்டது.

கவிதைப் போட்டியில் பங்கேற்றவர் களுக்கு பரிசு

முன்னாள் முதலமைச்சர் காமராஜ ரின் பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப் பட்ட கவிதைப் போட்டியில் பங்கேற் றவர்களுக்கு விழாவில் பரிசுகள் வழங் கப்பட்டன. இணைச் செயலாளர் ஆர். தேன்மொழி மற்றும் செயற்குழு உறுப் பினர் ஆர்.தமிழ்த்தேனி ஆகியோர் கவி தைகள் வாசித்தனர். நிகழ்ச்சியின்போது தமிழ் ஆசிரியர்கள் ஏ.காந்திமதி, ஏ.லோகநாதன் ஆகி யோர் முத்தமிழ்ச் சங்கத்தில் புதிய உறுப்பினர்களாக இணைந்தனர். விழாவில் துணைத் தலைவர் பி.எம். சதீஷ்குமார், செயற்குழு உறுப்பினர்கள் கே.சண்முகம், எம்.நடராஜன், க.வெங் கடேசன், நிழல் பவுண்டேஷன் இயக் குநர்கள் விநாயகமூர்த்தி, சேட்டு, உத வித் தலைமை ஆசிரியர் வரதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் இணைச் செயலாளர் ஆர். அசோக் நன்றி கூறினார்.

# எடப்பாடி பழனிசாமியை குறை கூறுபவர்கள் முதலில் தங்கள் தோல்விக்கு பொறுப்பேற்க வேண்டும் - அக்ரி கிருஷ்ணமூர்த்தி

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது சில மூத்த நிர்வாகிகள் கூறி வரும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்றும், தேர்தல் தோல்விக்கு அவரை மட்டும் குறை கூறாமல்,அந்தந்தமாவட்டநிர்வாகிகள் தங்களது பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் அதிமுக கொறடாவும், முன்னாள் அமைச்சருமான அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

திருவண்ணாமலையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:



எடப்பாடி பழனிசாமி அதிமுகவில் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து வருகிறார் என்று நத்தம் விஸ்வநாதன், எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட சிலர்கூறுவது தவறானது. கட்சியின் முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு நிர்வாகிகளிடம் அவர் ஆலோசனை நடத்தி வருகிறார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜனதாவுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக கட்சி நிர்வாகிகளிடம் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. 300க்கும் மேற்பட்ட நிர்வாகிகளின் கருத்துகளை கேட்டறிந்த பிறகே கூட்டணி தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் பல்வேறு தொகுதிகளுக்கு மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரை செய்த வேட்பாளர்களுக்கே வாய்ப்பு வழங்கப்பட்டது. 234 தொகுதிகளில் 196 தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி நேரடியாக பிரசாரம் மேற்கொண்டார். திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் 5 தொகுதிகளை அதிமுக கைப்பற்றியுள்ளது.

எனவே, தேர்தல் தோல்விக்கு எடப்பாடி பழனிசாமியை மட்டும் குறை கூறுவது ஏற்புடையதல்ல. தோல்வியடைந்ததொகுதிகளில்அந்தந்தமாவட்ட நிர்வாகிகள் தங்களது பணிகள் குறித்து முதலில் விளக்கம் அளிக்க வேண்டும். தங்களது குறைகளை மறைப்பதற்காக எடப்பாடி பழனிசாமி மீது சிலர் தவறான குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர்.

கட்சிக்கு எதிராக செயல்பட்டவர்களையும், பின்னர் மன்னிப்பு கேட்டு திரும்பியவர்களையும் எடப்பாடி பழனிசாமி அரவணைத்து வருகிறார். அதிமுகவை வலுப்படுத்துவதற்காக பல்வேறு சவால்களுக்கு மத்தியில் அவர் கட்சியை வழிநடத்தி வருகிறார். மேலும், திமுகவுடன் கூட்டணி அமைப்போம் என்று எடப்பாடி பழனிசாமி எந்த நேரத்திலும் கூறவில்லை. திமுகவை எதிர்த்து உருவான இயக்கம் தான் அதிமுக. திமுக தீய சக்தி என்ற எங்களது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

கட்சியின் நலனுக்கு எதிராக தொடர்ந்து செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முழு அதிகாரமும் எடப்பாடி பழனிசாமிக்கு உள்ளது. எதிர்காலத்தில் தமிழகத்தில் அதிமுக ஆட்சி அமையும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அக்ரி எஸ். எஸ்.கிருஷ்ண மூர்த்தி கூறினார்.

பேட்டியின்போது செங்கம் எம். எல்.ஏ. வேலு, மாநில பேரவைதுணைச் செயலாளர் நாராயணன், மாநில மகளிரணி துணைச் செயலாளர் அமுதா, மாவட்ட பொருளாளர் நைனாகண்ணு உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், ஆய்வு

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



அதன்படி தென்காசி மாவட்டஅரசுதலைமை மருத்துவ மனை வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவில் இயங்கும் சீமாங் சென்டர் மற்றும் பச்சிளங்குழந்தை சிகிச்சை பிரிவு ஆகியவற்றையும், மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் இயங்கும் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தினையும், மாவட்டஅரசுதலைமை மருத்துவமனை வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் இயங்கும் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தினையும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மாவட்ட மருந்து கிடங்கினையும், மாவட்டஅரசுதலைமை மருத்துவமனை வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் இயங்கும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தினையும், ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தின் கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, சாம்பவர் வடகரையில் உள்ள கால்நடை பராமரிப்பு துறையின் சமூக நாய்களுக்கான இனப் பெருக்க கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மையத்தினையும், கடையநல்லூர் வட்டாரம் குலையனேரி கிராமத்தில் NADP திட்டம் 2024 2025இன் கீழ் நிரந்தர பந்தல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதையும், ஊர்மேலழகியான் கிராமத்தில் இயங்கும் ஆர். வி. எஸ் வேளாண் அறிவியல் மையத்தினையும் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பழைய ஓய்வூதியத் திட்டம்: மீட்பு இயக்கம் கோரிக்கை

பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு பழைய ஓய்வூதியத்திட்ட மீட்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.




இதுதொடர்பாக, இயக்கத்தின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியதாஸ் திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: தவெக தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளதுபோல, அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல் படுத்த வேண்டும்.

கடந்த ஆட்சியாளர்களால் தமிழ்நாடுஉறுதியான ஓய்வூதிய திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 11,000 கோடி பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லை, அதுகுறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும். ஜன.1ம் தேதிக்கு முன்னர் பங்களிப்பு ஓய்வூதியம் திட்டத்தில் ஓய்வுபெற்ற 50 ஆயிரம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




# செங்குன்றம் புதிய பேருந்து நிலையத்தை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்

பழனி பகுதியிலிருந்து தினமும் அதிகாலை மற்றும் இரவு நேரங்களில், இருசக்கர வாகனங்களில் மூட்டை மூட்டையாக ரேஷன் அரிசி ஏற்றிச் செல்லப்படுகிறது. ரேஷன் அரிசியைப் பல வாகனங்களில் கடத்திச் செல்லும் விடியோக்களும் புகைப்படங்களும் தொடர்ந்து சமூக வலைதளங்களில் வெளியாகி, பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன.எளிய மக்களின் பசியைப் போக்க அரசு வழங்கும் அரிசியை, குறைந்த விலைக்குக் வாங்கி, வெளிமாநிலங்களுக்கும் கருப்புச் சந்தையிலும் அதிக விலைக்கு விற்பனை செய்யும் கும்பல் தீவிரமாகச் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது★.அரசுஏழைஎளியமக்களின்நலனுக்காகவழங்கும் ரேஷன் அரிசியைத் தங்குதடையின்றிச் சென்றடையச் செய்ய, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை (FOOD CELL CID) அதிகாரிகள் உடனடியாக இதில் தலையிட வேண்டும்




பழனியில் மூதாட்டியைக் கொலை செய்து, 7 சவரன் நகையைக் கொள்ளையடித்த சம்பவத்தில், 2 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. பழனி மாரியம்மன் கோவில் எதிரே உள்ள தெருவில், 7 பவுன் நகைக்காக ராமுத்தாய் 80 வயது மூதாட்டி கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்ட வழக்கில், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் உத்தரவின் பேரில், இரண்டு இன்ஸ்பெக்டர், 7 சார்பு ஆய்வாளர்கள் உள்ளிட்ட 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகள் தேடும் பணி துவங்கியது.




## தேசபக்தி செய்தி எதிரொலி:

# செங்குன்றம் பேரூராட்சி வண்டிமேட்டில் சேதடைந்திருந்த குடிநீர் பைப் சரி செய்யப்பட்டது

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி 8வது வார்டுக்குட்பட்ட வண்டிமேடு பகுதியில் அமைந்துள்ள மாப்பிள்ளை 3.0 டீக்கடை முன்பு பொதுமக்களின் வீடுகளுக்குச் செல்லும் குடிநீர் பைப் சேதமடைந்து கடந்த 2 மாதங்களாக தண்ணீர் வீணாகி சாலையில் ஆறு போல் ஓடிக் கொண்டிருக்கின்றது என்று தேசபக்தி நாளிதழில் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

இச்செய்தியை அறிந்த செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கர் உடனடியாக சிமெண்ட் பூசியிருந்த தரையை உடைத்து குடிநீர் பைப்பை சரி செய்து பொதுமக்களுக்கு குடிநீர் சீராக செல்ல வழி செய்தனர்.

அரசு அலுவலர்கள் உடனடியாக இப்பைப்பை சரி செய்ய ஒத்துழைத்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செங்குன்றம் நகரப் பொறுப்பாளர் பயாஸ் உசேன் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் நன்றி தெரிவித்தனர்.




பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்குச் சொந்தமான தண்டபாணி மடத்தின் ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக பதிவு செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் எஸ். அன்வர்தீன் , மதுரை மத்திய சிறையில் உயிரிழந்தார்

# தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் GATE தேர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் பயிலும் மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு GATE தேர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சி செமினார்அரங்கத்தில்வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமை ஏற்று நிகழ்ச்சி தொடங்கி வைத்து பேசுகையில் பொறியியல் படிக்கும் மாணவ மாணவிகளின் எதிர்கால வாழ்விற்கு GATE தேர்வு எந்த அளவிற்கு முக்கியமானது என்பது குறித்து விளக்கமாக உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார். இந்த GATE தேர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சி யில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஸ்ரீமான் மாணவ மாணவியர்களிட உரையாற்றும் போது GATE தேர்வு என்றால் என்ன? அந்த தேர்வினை எப்படி எதிர்கொள்ள வேண்டும் எளிய முறையில் படித்து எப்படி தேர்ச்சி பெறலாம் இந்த GATE தேர்வில் தேர்ச்சி பெற்றால் அடுத்த கட்ட படிப்பு மற்றும் எதிர்கால வேலை வாய்ப்புகளை எவ்வாறு தேர்வு செய்யலாம் என்பது குறித்து எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியினை மின் மற்றும் மின்னணு வியல் துறை பேராசிரியர் தவச்செல்வம் ஒருங்கிணைப்பு செய்தார். இதில் அனைத்து துறை தலைவர்கள்,பேராசிரியர்கள், மற்றும் மூன்றாம் நான்காம் ஆண்டு மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் பிரதான தொழிலான விசைத்தறி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி நெசவாளர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மாவட்டத்தில் வளர்ந்து வரும் நகரங்களில் முக்கியமான நகரமாகும். சங்கரன்கோவில்பகுதியைபொறுத்தவரை விசைத்தறி தொழில் மிகவும் முக்கியமானதாகும். விசைத்தறி தொழிலை நம்பி நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 25,000 தொழிலாளர்கள் பணி செய்து வருகின்றார்கள். இந்நிலையில் சங்கரன்கோவிலில் செயல்பட்டு வந்த சாயப்பட்டறைகளை ஆய்வு செய்த அமைச்சர் ராஜீவ் விதிமுறைகளை மீறி சாயப்பட்டறைகள் செயல்பட்டு வந்ததாக அதை சீல் வைக்கஉத்தரவிட்டார். எந்தவித மாற்று ஏற்பாடும் இல்லாமல் உடனடியாக சாயப்பட்டறைகள் சீல் வைக்கப்பட்டது.தொடர்ந்து அந்த ஆலைகளுக்கான மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. சங்கரன்கோவிலில் பிரதான தொழிலாளர் விசைத்தறி தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் செயல்பட்ட அரசை கண்டித்து விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் சாலை மறியல்,கண்டன ஆர்ப்பாட்டம், கஞ்சி தொட்டி திறக்கும் ஆர்ப்பாட்டம் என பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மூலம் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வந்தனர். மேலும் சாயப்பட்டறைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் சங்கரன்கோவிலில் பிரசித்தி பெற்ற ஆடித்தபசு திருவிழா 12 நாட்கள் நடைபெற்றதால் விசைத்தறி தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர். இந்நிலையில் சங்கரன்கோவில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி நெசவாளர்கள் சார்பில் நேற்று முன்தினம் இரவு சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் பாடா பிள்ளையார் கோவில் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு செங்குந்தர் அபிவிருத்தி சங்க செயலாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் திமுக முன்னாள் அமைச்சர் தங்கவேலு, சங்கரன்கோவில் நகர் மன்ற அதிமுக துணை தலைவர் கண்ணன், பாஜக மாவட்ட தலைவர்ஆனந்தன்அய்யாச்சாமி,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் அசோக் ராஜ், இந்து முன்னணி கோட்டச் செயலாளர் ஆறுமுகச்சாமி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் முருகையா பாண்டியன், நாம்தமிழர்கட்சி கார்த்திக் உள்ளிட்ட பலர் கண்டன உரையாற்றினார்கள். அப்போது கோரி க்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் விசைத்தறி தொழிலாளர் சங்க மாவட்ட பொருளாளர் மாணிக்கம்,அதிமுக ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், செல்வராஜ், செல்வம், பாஜக நகர தலைவர் உதயகுமார், இந்து முன்னணி மாவட்டச் செயலாளர் ஆறுமுகம், விஸ்வ ஹிந்து பரிஷத் மாவட்ட செயலாளர்வன்னியராஜ், விசைத்தறி உரிமையாளர்கள், தொழிலாளர்கள், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் செங்குந்தர் முன்னேற்ற சங்கம் மற்றும் பெண்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.




## தேசபக்தி செய்தி எதிரொலி:

# புள்ளிலைன் பொது விநியோகக் கடை; பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டது

தேசபக்தி செய்தி எதிரொலி புள்ளிலைன் பொது விநியோகக் கடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டது

மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புள்ளிலைன் ஊராட்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கடந்த திமுக ஆட்சியில் பொது விநியோகக் கடை அனைத்துகிராமஅண்ணா மறுமலர்ச்சி (AGAMT) திட்டத்தின் கீழ் ரூ. 13.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்தை மாதவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் திறந்து வைத்திருந்தார்.




இந்த நியாய விலைக் கடை பொதுமக்களின் பயன்பாட்டிற்குகொண்டு வரப்படவில்லை என்றும் இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றனர் என தேசபக்தி நாளிதழில் ஒரு சில நாள்களுக்கு செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

இச்செய்தியை அறிந்த சைதாப்பேட்டை கூட்டுறவு சங்க பொது மேலாளர் நீதிராஜன், மேலாளர் தணிகாச்சலம் ஆகியோர் இந்த நியாய விலைக்கடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வந்தனர். இதனை அறிந்த பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் அதிகாரிகளை வெகுவாகப் பாராட்டினர். இந்த நியாய விலைக் கடையில் புள்ளிலைன், தீர்த்தக்கிரியம்பட்டு ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 820 ரேஷன் கார்டு அட்டைதாரர்கள்பயனடைவது குறிப்பிடத்தக்கது.




# தமிழகத்தில் சைபர் மோசடிக்கு உதவிய 837 பேர் கைது

## 48 மணி நேரம் சிறப்பு அதிரடி நடவடிக்கை

: தமிழகம் முழுவதும் மேற்கொண்ட 48 மணி நேர சிறப்பு அதிரடி நடவடிக்கையில், சைபர்மோசடி யில் தொடர்புடைய 837 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 204 செல்போன்கள், 185 சிம் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சிபிஐ அதிகாரிகள், மும்பை கமிஷனர், வருமான வரித் துறை கமிஷனர் என பல உயரதிகாரிகளின் பெயர்களைக் கூறி பல கும்பல்கள் பொது மக்களை மிரட்டி கோடிக் கணக்கில் பணம் பறித்து வருகிறது.

வாட்ஸ் அப் வீடியோ கால் மூலம் அழைக்கும் சைபர் மோசடி கும்பல், 'உங்கள் ஆதார், பான் எண்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளது. சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை நடந்துள்ளது. இதுதொடர்பாக உங்களை கைது செய்ய போகிறோம்' என்று உயரதிகாரி போல் நடித்து மிரட்டும்.

அ த ற் கே க ற் ப சீருடைகளையும் அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் அணிந்து மிரட்டி பணம் பறிக்கின்றனர். நாங்கள் சொல்லும் வரை வெளியில் செல்ல கூடாது, யாரிடமும் பேச கூடாது. உங்களை 'டிஜிட்டல் கைது' செய்துள்ளோம் என்று பல நாட்கள் மிரட்டிய சம்பவங்களும் நடந்துள்ளன.

தவிர ஆன்லைன் வர்த்தகம் மற்றும் முதலீட்டு திட்டங்களில் அதிக லாபம் கிடைக்கும் என ஆசைவார்த்தை கூறி பணம் சுருட்டுதல் உள்ளிட்ட பல்வேறு சைபர் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

இந்த மோசடிகளில் ஈடுபடும் கும்பல்கள், தமிழகம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை இடைத்தரகர்கள் மற்றும் முகவர்களாகப் பயன்படுத்தி வருகின்றன. அவர்களுக்கு மோசடி தொகையில் 10 சதவீதம் வரை கமிஷன் வழங்கப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

எளிதில் பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையில் இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் சிலரும், தங்களது வங்கி கணக்குகளை மோசடி கும்பல்கள் பயன்படுத்த அனுமதித்து வருவது விசாரணையில் தெரிய வந்தது.

டிஜிபி உத்தரவு: சைபர் மோசடிக்குத் துணை போகும் முகவர்கள் மற்றும் இடைத்தரகர்களைக் கண்டறிந்து கைது செய்ய அனைத்து மாவட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும் டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் உத்தரவிட்டார்.

இதையடுத்து மாநில சைபர் குற்றப்பிரிவு போலீஸார் ஒருங்கிணைப்பில் மாவட்ட போ லீ ஸா ரு டன் இணைந்து கடந்த 6 மற்றும் 7ம் தேதிகளில் 48 மணி நேர சிறப்பு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாநில சைபர் குற்றப்பிரிவு டிஜிபி பாலநாகதேவி தலைமையில் நடைபெற்ற இந்த நடவடிக்கையில், தமிழகம் முழுவதும் 837 சைபர் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையில் தேசிய சைபர் குற்றப் புகார் இணையதளமான (என்சிஆர்பி) 9,804 புகார்களுடன் சம்பந்தப்பட்ட ரூ.545 கோடியே 27 லட்சத்து 27,809 மதிப்பிலான மோசடி பணப் ப ரி வ ர் த் த னை க ள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. சைபர் குற்ற வழக்குகளில் பதிவு செய்யப்பட்ட 601 முதல் தகவல் அறிக்கைகளில் தொடர்புடைய 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடி பணத்தை பெறவும், பல்வேறு கணக்குகளுக்கு மாற்றவும் பயன்படுத்தப்படும் 'மியூல்' வங்கி கணக்குகளைத் தடுக்க 157 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 204 செல்போன்கள், 185 சிம் கார்டுகள், 4 லேப்டாப் மற்றும் டெஸ்க் டாப் கணினிகள், ஒரு பென்டிரைவ் உள்ளிட்ட சேமிப்பு சாதனம், ரூ.1 லட்சத்து 2,000 ரொக்கம், 114 வங்கி பாஸ் புக்குகள், 29 காசோலை புத்தகங்கள், 73 ஏடிஎம் மற்றும் டெபிட் கார்டுகள், ஒரு கிரெடிட் கார்டு உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் விசாரணைக்காக 155 செல்போன் எண்கள் மற்றும் 58 வங்கி கணக்குவிவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் டிஜிட்டல் ஆதாரங்களைப் போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர். இதன் மூலம் சைபர் குற்ற கும்பலின் அடுத்தடுத்த அடுக்குகளில் செயல்படும் நபர்கள் மற்றும் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் உள்ள கூட்டாளிகளைக் கண்டறிந்து கைது செய்யும் நடவடிக்கைகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மோசடி செய்யப்பட்ட பணத்தை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட இந்த 48 மணி நேர சிறப்பு நடவடிக்கை, சைபர் குற்ற வலையமைப்பைச் சீர்குலைக்கும் முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது என போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.


இதற்கிடையில், சட்டத்தில் 'டிஜிட்டல் கைது' என்பது இல்லை. அப்படி யாராவது உங்களை மிரட்டினால் பயப்பட வேண்டாம். உடனடியாக போலீஸில் தகவல் தெரிவிக்கவும் என்று போ லீ ஸா ர் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

# பழநி நில மோசடியில் கைதான சார் பதிவாளர் தீவிர கண்காணிப்பு

## மருத்துவமனையில் பலத்த பாதுகாப்பு

பழநி நில மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பலத்த பாதுகாப்புடன் தீ விர மருத் துவக் கண்கா ணிப்பில் சிகிச்சை பெற்று வருகிறார்.





பழநி மடம் நில மோசடி வழக்கில்

சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், முருகதாஸ், வெள்ளைத்துரை, சேதுபதி, அன் வர்தீன், ஜெயப்பிரகாஷ் உள்ளிட்ட 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்த போலீஸார் 6 பேரை கைது செய்தனர். இதில் மதுரை மத்திய சிறையில் அடை க் கப்ப ட்டுள்ள வெள் ளத்துரை, சேதுபதி, அன்வர்தீன், ஜெயப்பிரகாஷ் ஆகியோரில் அன்வர்தீன் திடீர் உடல்நலக்குறைவால் இறந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கின் முக்கிய நபரான சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்ட போது உடல்நலக் குறைவால் திண்டு க் கல் அரசு மரு த்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.





திண்டுக்கல் மாவட்டம் சீலப்பாடி ஆயுதப்படை வளாகத்தில் உள்ள பழனி மஹாலில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்ஜெயக்குமார்,இ.கா.ப.,அவர்களின் அறிவுறுத்தலின்படி(08.08.2026)இன்றுதிண்டுக்கல் நகர் மற்றும் ஊரக உட்கோட்ட காவல்துறையினர் மற்றும் ஆயுதப்படை காவலர்களுக்கு காவலர் குடும்ப நல மையம் சார்பாக மகிழ்ச்சி என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சியில் காவலர்களின் உடல்நலம், மனநிலை, யோகா மற்றும் குடும்ப நலன்கள் குறித்து காவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் காவலர் குடும்ப நல மையத்தினருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நினைவு பரிசு வழங்கினார்கள்.

# பச்சையம்மன் மன்னர் சாமி கோவிலில் சிறப்பு வழிபாடு; பொங்கல் வைத்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்

ஆடி மாதத்தின் நான்காவது வார ஞாயிற்றுக்கிழமையான இன்று, திருவண்ணாமலை பச்சையம்மன் மன்னர் சாமி திருக்கோவிலில் ஏராளமான பக்தர்கள் சிறப்பு வழிபாடு மேற்கொண்டு, பொங்கல் வைத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

ஆடி மாதம் அம்மன் வழிபாட்டிற்கு உகந்த மாதமாக கருதப்படுவதால், ஆடி மாத ஞாயிற்றுக்கிழமைகளில் அம்மன் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். இதன்படி, ஆடி மாதத்தின் நான்காவது வார ஞாயிற்றுக்கிழமையான இன்று பச்சையம்மன் மன்னர் சாமி திருக்கோவிலில் அதிகாலை முதலே பக்தர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது.

திருவண்ணாமலை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் குடும்பத்துடன் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் தங்களது குடும்ப நலன், உடல் ஆரோக்கியம், தொழில் மற்றும் விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காகவும், ஏற்கனவே வேண்டிய வேண்டுதல்கள் நிறைவேறியதற்காகவும் பொங்கல் வைத்து வழிபாடு செய்தனர். கோவில் வளாகத்தில் பக்தர்கள் குடும்பம்



குடும்பமாக பொங்கல் வைத்து, அம்மனுக்கு படையலிட்டு நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். பெண்கள் உள்ளிட்ட பக்தர்கள் பாரம்பரிய முறையில் பொங்கல் வைத்து, மலர் மாலைகள், பழங்கள் உள்ளிட்ட பொருட்களை அம்மனுக்கு படைத்து சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர். பொங்கல் பொங்கி வந்த போது பக்தர்கள் பக்தி பரவசத்துடன் அம்மனை வழிபட்டு, தங்களது குடும்பத்தினரின் நலனுக்காகவும், வேண்டுதல்கள் நிறைவேறவும் பிரார்த்தனை செய்தனர். இதனால் கோவில் வளாகம் முழுவதும் பக்தி பரவசத்துடன் காணப்பட்டது. ஆடி மாதத்தின் நான்காவது வார ஞாயிற்றுக்கிழமையையொட்டி நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டதால், கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பக்தர்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. குடும்பத்துடன் கோவிலுக்கு வந்த பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்ததுடன், பொங்கல் வைத்து நேர்த்திக்கடனை செலுத்தி மனநிறைவுடன் வீடு திரும்பினர்.

ஆடி மாதம் முழுவதும் பக்தர்கள் தொடர்ந்து கோவிலுக்கு வருகை தரும் நிலையில், இன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொங்கல் வழிபாடு பக்தர்களிடையே ஆன்மிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே பாலாறு அணையின் பணிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் துஷ் வந்த இறந்த நிலையில் உடல் மீட்போம் தற்கொலையா அல்லது வேறு எதுவும் காரணமா என்ற கோணத்தில் தாலுகா போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

# இராமநாதபுரம் அருகே பெண்களுக்கு 15 நாள் இலவச தொழில் மேம்பாட்டு பயிற்சி தொடக்கம்

இ ரா ம நா த பு ர ம், திருப்புல்லாணி வட்டாரம் பெரிய பட்டினம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட முத்தரையர் நகர் கிராமத்தில், பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்தை நோக்கமாக கொண்டு நடத்தப்படும் 15 நாட்கள் இலவச தொழில்திறன் மற்றும் தொழில் மேம்பாட்டு பயிற்சியின் தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. OFSI ஒமேகா ஃபோரம் சமூக பங்களிப்பு திட்டத்தின் கீழ், வாப்ஸ் (VAPS) நிறுவனம் மற்றும் ஒமேகா ஃபோரம் ஆகியவை இணைந்து இப்பயிற்சியை வழங்கி வருகின்றன.

ஏற்கனவே ஒரு மாத கால தொழில்திறன்பயிற்சி ை ய வெற்றிகரமாக முடித்த பெண்களுக்கு, அடுத்த கட்ட தொழில் வளர்ச்சிக் க ா க

இந்த சிறப்பு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிக்கு வாப்ஸ் நிறுவனத்தின் திட்ட அதிகாரி DR. எம். சுப்புராஜன் வரவேற்புரையாற்றினார்.

அவர் பேசுகையில், பெண் தொழில் முனைவோர்கள் தாங்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு தரமான பிராண்டிங் மற்றும் கவர்ச்சிகரமான பேக்கேஜிங் செய்வதன் மூலம் சந்தையில் தனித்துவத்தை உருவாக்கி, அதிக லாபம் ஈட்ட முடியும் என்று குறிப்பிட்டார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் 'மதி சிறகுகள்' தொழில் மையத்தின் தொழில் வளர்ச்சி அலுவலர் தேவி பேசுகையில், தொழில் தொடங்க விரும்பும் பெண்களுக்கு அரசின் பல்வேறு கடன் உதவி மற்றும் மானிய திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

மேலும், வெற்றிகரமான தொழில் முனைவோராக உருவாக தேவையான நடைமுறைகள் மற்றும் யுக்திகளையும் அவர் பகிர்ந்து கொண்டார். வாப்ஸ் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் . எஸ். குமார் நன்றியுரையாற்றுகையில், பயிற்சியின் மூலம் கிடைக்கும் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தி, பெண்கள் அனைவரும் வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற வேண்டும் என ஊக்குவித்தார்.

இந்நிகழ்வில் பெரிய பட்டினம் ஊராட்சியை சேர்ந்த பிரதிநிதிகள் எம். பாலமுருகன், எம். நாகராஜ் மற்றும் பி. என். கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




பயிற்சியாளர்களை மேனகா ஒருங்கிணைத்தார். 40க்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் பங்கேற்றுள்ள இ ப் ப யி ற் சி யி ல் பிராண்டிங், பேக்கேஜிங், டிஜிட்டல் மார்க்கெட்டிங், நிதி மேலாண்மை மற்றும் தொழில் வணிக ஆலோசனைகள் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

### ஆக.10ல் தேசிய குடற்புழு நீக்க நாள்:

# 8.08 லட்சம் குழந்தைகள், பெண்களுக்கு அல்பெண்டசோல் மாத்திரை

## திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தகவல்

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், தேசிய குடற்புழு நீக்க நாள் வரும் ஆகஸ்ட் 10ஆம் தேதி (திங்கள்கிழமை) கடைப்பிடிக்கப்பட உள்ளது. இதையொட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 முதல் 19 வ ய து க் கு ட் ப ட் ட அனைத்து குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு (கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர) குடற்புழு நீக்க மாத்திரையான அல்பெண்டசோல் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 200 மி.கி. அல்பெண்டசோல் மாத்திரையும், 2 முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு 400 மி.கி. அல்பெண்டசோல் மாத்திரையும் வழங்கப்பட உள்ளது.

இந்த மாத்திரைகள் அனைத்து துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இலவசமாக வழங்கப்படும். ஆகஸ்ட் 10ஆம் தேதி மாத்திரை உட்கொள்ளதவறியவர்களுக்கு, ஆகஸ்ட் 17ஆம் தேதி (திங்கள்கிழமை) சிறப்பு நாளாக கடைப்பிடித்து மாத்திரைகள் வழங்கப்படும்.

தி ரு வ ண் ணா ம லை மாவட்டத்தில் 1 முதல் 19 வயதுக்குட்பட்ட 6,22,626 குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட 1,85,758 பெண்கள் என மொத்தம் 8,08,384 பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளன. கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி



பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

குடற்புழு தொற்று ஏற்படுவதால் ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு, பசியின்மை, இரத்த சோகை, குமட்டல், வாந்தி, வயிற்றுவலி மற்றும் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படக்கூடும். குடற்புழு நீக்க மாத்திரையை உட்கொள்வதன் மூலம் குழந்தைகளின் இரத்த சோகையைத் தடுக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவுகிறது. மேலும், குழந்தைகளின் பள்ளி வருகையும் அதிகரிக்க வழிவகுக்கிறது.

குடற்புழு தொற்றைத் தடுக்க...

திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து, கழிவறைகளை முறையாக பயன்படுத்த வேண்டும். காலணிகளை அணிய வேண்டும். நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உணவு உட்கொள்வதற்கு முன்பும், கழிவறையை ப யன் ப டு த் தி ய பின்னரும் சோப்பு போட்டு கைகளை நன்றாக கழுவ வேண்டும். சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரமான உணவை உட்கொள்வதுடன், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரத்துறை, பள்ளிக் கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்ப ணிகள், சமூக நலத்துறை, பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊட்டச்சத்துத் துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் (கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர) தேசிய குடற்புழு நீக்க நாளில் அல்பெண்டசோல் மாத்திரையை உட்கொண்டு ப யன் பெ று மா று மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA